கிண்டி பாம்பு பண்ணையில்...

ஞாயிறு விடுமுறையையொட்டி, கிண்டி பாம்பு பண்ணைக்கு பெற்றோர்களுடன் நேற்று வந்த சிறுவர், சிறுமிகள் அங்குள்ள பெரிய வகை பல்லி இனமான இகுவானாவை தொட்டு பார்த்தனர்.

நாடு சிரிக்கும் நான்கு மாதங்கள்

என் 4 கேள்விகளுக்கு பதில் உண்டா? சிஎம் சார்

சென்னை, அக்.5: நாடு சிரிக்கும் நான்கு மாதங்கள். என் 4 கேள்விகளுக்கு பதில் உண்டா? சிஎம் சார் என்று மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது:

சிஎம் சார்... நாடு சிரிக்கும் நான்கு மாதங்கள். இந்த நான்கு கேள்விகளுக்குப் பதிலுண்டா...?. பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியோரைச் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் மாவட்டச் செயலாளர்களாகவும் வைத்துக்கொண்டு முதலமைச்சர் பெண் பாதுகாவலர் போல வேடம் போடலாமா?.

அறிவிக்கப்படாத மின்வெட்டில் இருந்து, இனி தினமும் அறிவித்துவிட்டு 8 மணிநேரம் மின்வெட்டு என்பதை நோக்கித் தமிழ்நாடு நகரவுள்ளதாக வரும் செய்திகள் உங்கள் செவிகளை எட்டவில்லையா?.

மு.க.ஸ்டாலின் சரமாரி கேள்வி

அசையாத மரமொன்று விழுந்தது கீழே என்ற கதையாக, இடைத்தேர்தல் தோல்வியை தவிர்க்க நீங்கள் மணிக்கணக்கில் தெருவலம் போவது போதாமல், டிபன் கேரியரில் பணமும் போகிறதாமே? ஒரு தெருவுக்கு இவ்வளவு என வாக்குகள் விலைபேசப்படுவதாக உங்கள் ஆட்சி அமைய ஆதரவு தெரிவித்த கட்சிகளே குற்றம்சாட்டுவதற்குப் பதில் என்ன?.

இத்தோடு, குதிரைவேக குதிரை பேரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா அல்லது, இனியும் தவெக குதிரை பேரம் அடுத்த சீசன் தொடருமா?. தூய சக்தி என தம்பட்டம் அடித்த உங்களது ரீல் இப்படி நான்கே மாதங்களில் அறுந்து தொங்கி விட்டதே.

இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

இடைத்தேர்தல் பிரசாரம் முடிந்த பின்னரும்

சமூக ஊடகம், டிஜிட்டல் தளம் மூலம் முழு அளவில் தவெக பிரசார திட்டம்

தேர்தல் ஆணையத்தில் திமுக புகார்

சென்னை, அக்.5: இடைத்தேர்தல் பிரசாரம் முடிந்த பின்னரும் சமூக ஊடகம், டிஜிட்டல் தளம் மூலம் தவெக முழு அளவில் பிரசாரம் செய்ய திட்டமிட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தில் திமுக புகார் அளித்துள்ளது.

திமுக சட்டத்துறை துணை செயலாளர் ஜி.சந்திரபோஸ் தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம் அளித்த புகார் மனு:

மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் நாளை நடக்கிறது. 48 மணி நேர அமைதிக் காலம் தொடங்குவதை ஒட்டி, பிரசார காலம் 4ம் தேதி (நேற்று) மாலை 5 மணியுடன் முடிவடைய வேண்டும். இந்திய தேர்தல் ஆணையமும் அனைத்து வகையான ஊடகங்களிலும் அரசியல் கட்சிகளும் பிரசாரகர்களும் அமைதிக் காலத்தை கடைபிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

அமைதிக் காலம் தொடங்கிய பின்னரும், தவெக சமூக ஊடகங்கள் மற்றும் பிற டிஜிட்டல் தளங்கள் மூலம் முழு அளவிலான பிரசாரத்தை மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாக தெரிகிறது. இது அனுமதிக்கப்பட்டால், சட்டப்பூர்வமான அமைதிக் காலத்தை கடுமையாக சீர்குலைப்பதுடன், தொடர்ந்து தேர்தல் பரப்புரை மற்றும் ஆதரவு திரட்டுவதன் மூலம் ஒரு தரப்பிற்கு நியாயமற்ற சாதகமான சூழ்நிலையை உருவாக்கிவிடும்.

இத்தகைய சூழலில், நேற்று மாலை 5 மணிக்கு மேல் சமூக ஊடக தளங்கள், டிஜிட்டல் ஊடகங்கள், வீடியோ செய்திகள், நேரடி ஒளிபரப்புகள், விளம்பரங்கள், பொது அறிக்கைகள், பேட்டிகள், ஆன்லைன் விளம்பரங்கள் மற்றும் தேர்தல் பரப்புரை முறைகள் உள்ளிட்ட எந்தவொரு வழியிலும் சம்பந்தப்பட்ட தொகுதிகளில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதையோ அல்லது தொடர்வதையோ தடுக்கும் வகையில் தகுந்த மற்றும் உடனடி உத்தரவுகளை, வழிகாட்டுதல்களை உங்களது அலுவலகம் பிறப்பிக்க வேண்டும்.

மேலும், இந்த அமைதிக் காலத்தை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தவும், விதிகளை மீறுபவர்களை உடனுக்குடன் கண்காணிக்கவும், விதிகளை மீறும் எந்தவொரு நபர் அல்லது அரசியல் கட்சிக்கு எதிராக சட்டப்படி உடனடி நடவடிக்கை எடுக்கவும் சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள், பறக்கும் படைகள், ஊடகக் கண்காணிப்புக் குழுக்கள், சமூக ஊடகக் கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் காவல் துறையினருக்கு உடனடியாக தேவையான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். அனைத்து வேட்பாளர்களுக்கும் சுதந்திரமான, நியாயமான மற்றும் சமமான வாய்ப்பை உறுதி செய்வதற்கும், தேர்தல் செயல்முறையின் தூய்மை மற்றும் நேர்மையைப் பாதுகாப்பதற்கும் இந்த விஷயத்தில் அவசரத் தலையீடு அவசியமாகிறது. எனவே, தேவையான உத்தரவுகளையும் நடைமுறைகளையும் உடனடியாக பிறப்பித்து செயல்படுத்த வேண்டும்.

ஞானேஷ் குமார் பதவி விலகக்கோரி

இந்தியா கூட்டணி அடுத்தக்கட்ட போராட்டத்தில் விஜய் பங்கேற்பு

மாணிக்கம் தாகூர் பேட்டி

சென்னை, அக்.5: தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக்கோரி இந்தியா கூட்டணி முன்னெடுக்கும் அடுத்த கட்ட போராட்டத்தில் முதல்வர் விஜய் பங்கேற்பார் என்று காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் கூறினார்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் திருப்பூர் குமரன் மற்றும் சுப்ரமணிய சிவா ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை சத்தியமூர்த்தி பவனில் அவர்களது உருவப்படங்களுக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் நேற்று மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், காங்கிரஸ் பொதுச் செயலாளர்கள் சிரஞ்சீவி, பி.வி.தமிழ்ச்செல்வன், எஸ்.ஏ.வாசு, தணிகாசலம், ஓ.பி.சி. பிரிவு தலைவர் நவீன், மாமன்ற உறுப்பினர் எம்.எஸ்.திரவியம், வில்லிவாக்கம் சுரேஷ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, மாணிக்கம் தாகூர் அளித்த பேட்டி:

எங்கள் கூட்டணி வேட்பாளர்கள் தாராபுரம் மற்றும் மதுராந்தகம் ஆகிய இரண்டு தொகுதிகளிலும் அமோக வெற்றி பெறுவார்கள். முதல்வர் விஜய் வீதி வீதியாகச் செல்கிறார். இதற்கு தோல்வி பயம்தான் காரணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. ஒவ்வொரு தலைவருக்கும் ஒரு தனித்துவமான முறை இருக்கும். அந்த வகையில் விஜய் கையாளும் இந்த முறை சரியானதுதான்.

விஜய் முதல்வராக பொறுப்பேற்பதற்கு முன்பு, அவருக்குப் போதிய அளவில் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. கரூர் சம்பவம் அதன் ஒரு பகுதிதான். அவர்கள் கேட்கும் இடங்களில் அனுமதி வழங்கப்படுவதில்லை என்பதுதான் அவர்களின் முக்கியக் குற்றச்சாட்டு.

இப்போது ஆட்சியில் இருப்பவர்கள் கிராமம் கிராமமாகச் செல்வதில் என்ன தவறு இருக்கிறது?. பிரசார முறையைக் குறை சொல்வது ஏற்புடையதல்ல. இந்தியா கூட்டணியில் தமிழக வெற்றிக் கழகம் இணைந்துவிட்டது. 'இந்தியா கூட்டணியை விட்டு வெளியே வந்துவிட்டோம்' என்று முன்பு திமுகவினர் சொன்னார்கள். இப்போது அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரி இந்தியா கூட்டணி முன்னெடுக்கும் அடுத்தகட்ட போராட்டத்தில் முதல்வர் விஜய் பங்கேற்பார். இவ்வாறு அவர் கூறினார்.

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
India's International Bank

உங்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு சிறந்த உலகம்

powered by ai வசதியுடன் கூடிய முற்றிலும் புதிய bob World செயலி மூலம் புதிய தலைமுறை வங்கிச் சேவையை கண்டறியுங்கள்

இப்போதே அனுபவியுங்கள்

Call Toll Free No. (24x7): 1800 5700 / 1800 5000 | https://bankofbaroda.bank.in Follow on

நிதி இலக்கு திட்டமிடல்
குரல் மூலம் பணம் செலுத்துதல்
தனிப் பயனாக்கப்பட்ட பயனர் சுயவிவரங்கள்
அதிநவீன தனிப் பயனாக்கம்
Aditi-யிடம் கேளுங்கள், விர்ச்சுவல் ரிலேசன்ஷிப் மேலாளர்
bob World
Powered by ai
*விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும்

காலை உணவு திட்டத்தை கண்காணிக்க

காலை 7 மணிக்கே ஆசிரியர்கள் வர வேண்டும் என்ற அறிவிப்பை திரும்ப பெற வேண்டும்

ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு வலியுறுத்தல்

சென்னை, அக். 5: பள்ளி காலை உணவுத் திட்டத்தைக் கண்காணிக்க தினம்தோறும் ஆசிரியர் ஒருவர் காலையில் 7 மணிக்கே பள்ளிக்கு வர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. பல ஆசிரியர்கள் 40, 50 கிலோ மீட்டர் தொலைவில் இருந்து பணிக்கு வருகிறார்கள். காலை 7 மணிக்கே பள்ளிக்கு வருவது என்பது மிகவும் சிரமமாக இருக்கும். பெரும்பாலான தொடக்கப்பள்ளிகளில் ஓர் ஆசிரியர் மற்றும் இரு ஆசிரியர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். இவர்கள் தினந்தோறும் 7 மணிக்கே பள்ளிக்கு வர வேண்டிய நிலை. இதனால், அவர்கள் வீட்டில் இருந்து ஐந்து மணிக்கு கிளம்பினால் தான் பள்ளிக்கு 7 மணிக்கு வர இயலும். எனவே கண்காணிப்பு பணிக்கு காலை 8.15 மணிக்கு வர அனுமதிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்புத் தலைவர் அருணன் கூறியுள்ளார்.

சென்னையில் டெங்குவுக்கு 4,592 பேர் பாதிப்பு

மருத்துவத்துறை செயலாளர் தகவல்

சென்னை, அக்.5: சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இந்த ஆண்டு இதுவரை 4,592 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் தாரேஸ் அகமது தெரிவித்தார்.

தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 109-க்கு உட்பட்ட கிழக்கு நமசிவாயபுரம் 3வது தெருவில் நேற்று நடந்த காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாமை மருத்துவ துறை செயலாளர் தாரேஸ் அகமது பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு தடுப்பு பணிகளையும் பார்வையிட்டார். வீடு, வீடாகச் சென்று பொதுமக்களுக்கு டெங்கு தடுப்பு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன. கூவம் ஆற்றில் டிரோன் மூலம் கொசுப்புழு ஒழிப்பு மருந்து தெளிக்கும் பணியையும் ஆய்வு செய்தார்.

பின்னர் நிருபர்களிடம் தாரேஸ் அகமது கூறியதாவது:

சென்னை மாநகராட்சிப் பகுதியில் இந்த ஆண்டு இதுவரை 4,592 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர். மொத்தம் 16,254 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செப்டம்பர் மாதத்தில் மட்டும் 1,293 டெங்கு பாதிப்புகள் பதிவாகியுள்ளன. இதுவரை டெங்கு உயிரிழப்பு எதுவும் இல்லை.

சென்னை மாநகராட்சியில் 3,703 கொசு ஒழிப்புப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். தினமும் 100க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. கொசுப்புழு ஒழிப்பு மருந்து தெளிக்கும் 1,250 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து வகையான காய்ச்சல் பாதிப்புகளையும் பரிசோதனை செய்து, நோயைத் துல்லியமாக கண்டறிந்து உரிய சிகிச்சை அளிப்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக டெங்கு காய்ச்சல் குறையும் நேரத்தில் ஏற்படக்கூடிய அபாயங்களை கவனத்தில் கொண்டு, திரவப் பராமரிப்பு உள்ளிட்ட சிகிச்சை முறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

பருவகால மாற்றம் காரணமாக டெங்கு பாதிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இருப்பினும், தற்போது பாதிப்பு சீராகி குறைந்து வருகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் டெங்கு சிகிச்சைக்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொறியாளர்கள் நீக்கத்தை அரசு ரத்து செய்ய வேண்டும்

பெயர் பலகையில் இடம் பெறவேண்டிய மொழிகள் குறித்து தெளிவுபடுத்தவில்லை

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பட்டய பொறியாளர்கள் சங்கம் வேண்டுகோள்

சென்னை, அக்.5: தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறைக்கு 2025-26ல் ஒன்றிய அரசு நிதியில் இருந்து மாநில நெடுஞ்சாலையான ஆழ்வார்திருநகரி நாசரேத் சாத்தான்குளம் - இட்டமொழி வள்ளியூர் சாலையை மேம்படுத்துதல் உள்ளிட்ட மொத்த பணிக்கு ரூ.456 லட்சம் நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ளது. பணிகள் நிறைவு செய்யப்பட்டு, அதில் ஒருபகுதியாக வைக்கப்பட்ட ஊர்பெயர் அறிவிப்பு பலகையில் இந்தி மொழி இருப்பதாக சொல்லி உதவி கோட்ட பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகிய இருவரை தற்காலிக பணியிடை நீக்கம் தமிழக அரசு செய்திருப்பது ஏற்புடையது அல்ல என தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பட்டய பொறியாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

பொறியாளர்களுக்கு வழிகாட்டக்கூடிய வழிகாட்டுநெறிமுறையில் ஒன்றிய அரசின் நிதியில் தமிழ்நாட்டில் செய்யப்படுகின்ற சாலை பணிகளுக்கு இடம்பெறுகின்ற ஊர் பெயர் பலகையில் இருமொழியில் இருக்கவேண்டுமா அல்லது மூன்று மொழியில் இருக்க வேண்டுமா என்று தெளிவுபடுத்தபடவில்லை. இது சம்பந்தமான தெளிவான வழிகாட்டுதலை தமிழக அரசு கொள்கை ரீதியாக வெளியிட வேண்டுகிறோம்.

இந்த சூழ்நிலையில் மேற்கண்ட பணியில் தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழி அறிவிப்பு பலகையில் இடம்பெற்றுள்ளதை தெரிந்தவுடன் இந்தி மொழி நீக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சமூக வலைதளங்களில் செய்தி வெளிவந்தவுடன் சம்பந்தப்பட்ட பொறியாளர்களிடம் எந்த விளக்கமும் கேட்கமால் தற்காலிக பணியிடை நீக்கம் செய்திருப்பது வேதனையான நடவடிக்கை ஆகும். எனவே அதனை ரத்து செய்து சம்பந்தப்பட்ட பொறியாளர்களிடம் விளக்கம் கேட்டு அதில் எதவாது உள்நோக்கம் பொறியாளர்களுக்கு இருந்தது தெரியவந்தால் உரிய துறை ரீதியான நடவடிக்கை எடுப்பது தான் விதிமுறை ஆகும் என தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பட்டய பொறியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தவெகவில் இருந்து விரைவில் நாஞ்சில் சம்பத் வெளியேறுகிறாரா?

சென்னை, அக். 5: மேடைப் பேச்சாளரான நாஞ்சில் சம்பத் பல கட்சிகளில் பயணித்தவர். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் விஜய் முன்னிலையில் தவெகவில் இணைந்தார். அவருக்கு தவெகவில் பரப்புரைச் செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து அவர் ஊடகங்களில் தவெகவுக்கு ஆதரவாகப் பேசி வந்தார். சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும் பரப்புரை மேற்கொண்டார்.

இந்நிலையில், தற்போது அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "போனால் போகட்டும் போடா.. இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா.. என்னுடைய பகலை யவரும் இருட்டாக்க முடியாது.. என்னுடைய வெளிச்சத்தை யாரும் அணைக்க முடியாது.. என்னுடைய காற்றை யாரும் வழிமறிக்க முடியாது.." எனக் கூறியுள்ளார். அவரின் பதிவு பல்வேறு கேள்விகளுக்கு வித்திட்டுள்ளது.

நாஞ்சில் சம்பத்திற்கும் மதிமுகவுக்கும் இடையே நீண்ட நாட்களாக மோதல் போக்கு நிலவி வருகிறது. தொடர்ச்சியாக வைகோ மற்றும் துரை வைகோவை கடுமையாக விமர்சித்து வருகிறார். தவெக கூட்டணிக்கு மதிமுக வந்த பிறகும்கூட கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகிறார். தற்போது தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தலில் தவெக நட்சத்திர வேட்பாளர்கள் பட்டியலில் நாஞ்சில் சம்பத்தின் பெயர் இடம்பெறவில்லை. மதிமுகவின் தலையீடே இதற்கு காரணம் என கூறப்படுகிறது.

சமீப காலங்களில் சில காரணங்களால் நாஞ்சில் சம்பத்திற்கு தவெக தலைமை உரிய முக்கியத்துவம் அளிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. அதனால் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாகவே அவர் அவ்வாறு பதிவிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில் அவர் விரைவில் தவெகவில் இருந்தும் வெளியேறுவார் என வலைதளங்களில் கூறி வருகின்றனர்.

Phoenix ARC

பீனிக்ஸ் ஏஆர்சி லிமிடெட்

பதிவு அலுவலகம்: 3 ஆவது தளம், வாலஸ் டவர்ஸ், 139/140/B/1, சஹார் சாலை மற்றும் வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை சந்திப்பு, (E), வில்லே பார்லே கிழக்கு, மும்பை–400057, 400 098, தொலைபேசி: 022–68492450, பேக்ஸ்: 022–67412313
CIN: U67190MH2007PLC168303 மின்னஞ்சல்: info@phoenixarc.co.in இணையதளம்: www.phoenixarc.co.in

சொத்துகளின் இயங்குதள மின்–ஏலம் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சுருக்கமாக சர்பாசி சட்டம் என குறிப்பிடப்படும்) கடனீட்டு உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (சுருக்கமாக விதிகள் என குறிப்பிடப்படும்)– இன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர்களின் கடனீட்டுச் சொத்தை சுவாதீனம் செய்து, அதிகாரப்பூர்வ அதிகாரி சர்ஃபாசி சட்டம் மற்றும் விதிகளின்படி கடனீட்டுக் கடன்களை மீட்பதற்காக மின்–ஏலம் விற்பனை மூலம் கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளார்.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே குறிப்பிடப்பட்ட சொத்தானது பீனிக்ஸ் ட்ரஸ்ட் FY25–2 (பீனிக்ஸ்) –இன் ட்ரஸ்ட்டியாகச் செயல்படும் பீனிக்ஸ் ஏஆர்சி லிமிடெட் (முன்னர் பீனிக்ஸ் ஏஆர்சி பிரைவேட் லிமிடெட் என்றறியப்பட்டது) எச்டிஎப்சி பேங்க் லிமிடெட்டுடன் மேற்கொண்ட 27.03.2025 தேதியிட்ட ஒதுக்கீட்டு ஒப்பந்தத்தின்படி இந்தச் சொத்தானது கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, நிலுவைத் தொகைகள் மற்றும் கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை வசூலிப்பதற்காக, "உள்ளபடியே, இருக்கும் இடத்திலேயே, உள்ளபடியே, என்ன இருக்கிறதோ அப்படியே மற்றும் எந்தவொரு முறையீட்டு நிபந்தனையுமின்றி" என்ற அடிப்படையில், "ஆன்லைன் மின்–ஏலம்" மூலம் விற்கப்படும். இது, கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002) இன் 8 & 9 உடன் சர்பாசி சட்டம் விதிமுறைகளின்படி கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி https://www.bankeauctions.com என்ற இணையதளம் வழியாக நடைபெறும்.

கடன்தாரரின் பெயர்	திரு.ஜகத் ராம்ஜீ J N
உப கடன்தாரரின் பெயர்	திருமதி. சாய் ஸ்ரீ லக்ஷ்மி
நிலுவைத் தொகை	சர்ஃபாசி சட்டம் பிரிவு 13 (2) இன் கீழ் 06.12.2017 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின்படி 31.10.2017 தேதியின்படி மொத்த நிலுவைத் தொகை: ரூ.2,37,39,794/– (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தேழு லட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று தொன்னூற்று நான்கு மட்டும்) மற்றும் அதனுடனான ஒப்பந்த விகிதத்தில் கூடுதல் வட்டி மற்றும் இதர செலவுகள், கட்டணங்கள், முதலியனவும் அடங்கும்.
சர்ஃபாசி சட்டம், 2002 இன்படி சுவாதீனம்	நேரடி சுவாதீனம்
பார்வையிடும் தேதி	கோரிக்கையின்படி
ஏலப்புள்ளிகளைச் சமர்ப்பிப்பதற்கான தேதி (மின்–ஏலம்)	22 அக்டோபர் 2026 (வியாழக்கிழமை) மாலை 6.00 மணிக்கு முன்பாக
முன்வைப்புத் தொகை (EMD)	ரூ.29,00,000/– (ரூபாய் இருபத்தொன்பது லட்சம் மட்டும்)முன்வைப்புத் தொகையானது RTGS முறையில் "பீனிக்ஸ் பொறுப்பாட்சி FY 25–2 என்ற பெயரில் செலுத்தப்பட வேண்டும். நடப்பு கணக்கு: 5548931809, கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், கிளை: கலீனா, மும்பை, IFSC குறியீடு: KKBK0000631
நிர்ணய விலை	ரூ. 2,90,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே தொன்னூறு லட்சம் மட்டும்)
ஏலம் உயர்த்தும் மதிப்பு	ரூ.1.00 இலட்சம் & அதன் மடங்குகளில்
மின்–ஏலம் நாள்	23 அக்டோபர் 2026 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிக்குள்
ஏல நடைமுறை	ஆன்லைன் மின்–ஏலம்
அடமான கடனீட்டுச் சொத்துகள் விவரங்கள் :	வில்லா எண்.3, ஸ்ரீ சாய் விஷ்ணு வில்லா,அக்கரை, சென்னை–600119 இல் உள்ள 5834 ச.அடி பரப்பளவில் முகப்பு பகுதி 2416 ச.அடி உள்ள சொத்து. S.No.162/2A1A2, சோழிங்கநல்லூர் II கிராமம், 101/3, அக்கரை,சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சொத்தின் எல்லைகள்: வடக்கில்: S.No.162/1 இல் உள்ள சொத்து, தெற்கில்: 20 அடி பொதுச்சாலை, கிழக்கில்: பொன்னம்பலம் மற்றும் கிருஷ்ணகாந்த்திற்கு சொந்தமான சொத்து, மேற்கில்: பிரபா ஸ்வாமி, கிருஷ்ணமூர்த்தி ஸ்வாமிக்குக்குச் சொந்தமான சொத்து. சென்னை தெற்கு பதிவு மாவட்டம், நீலாங்கரை சார்–பதிவு மாவட்டத்தில் உள்ள சொத்து. (திருமதி. சாய் லக்ஷ்மி ராம்ஜி பெயரில் உள்ள ஆவண எண்.6503/2012 தேதி 30.11.2012–இல் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது)
ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கான இணைப்பு	https://phoenixarc.co.in?p=7655

விதிமுறைகள் & நிபந்தனைகள்:

1. ஏல விற்பனையானது மின்–ஏலம் முறை மற்றும் வழியில் சர்பாசி சட்டத்தின் விதிமுறைகள் கீழ் அதிகாரப்பூர்வ அதிகாரியால் நடத்தப்படுகிறது. ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அளிப்பது https://www.bankeauctions.com இணையதளம் வழியே "இயங்குதள மின்னணு முறை" மூலம் மட்டும் இருக்க வேண்டும். மின்–ஏலத்துக்கான தளம் ஏற்பாடு செய்து தரும் சேவை வழங்குநர் M/s. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆகும். **2.** ஏலமானது ஏலப்புள்ளி ஆவணத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி மேலும் அதில் அமைக்கப்பட்ட நடைமுறையின்படி நடத்தப்படும். விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், ஏலத்திற்கு வைக்கப்பட்ட கடனீட்டுச் சொத்து விவரங்கள் / ஏலப்புள்ளி படிவம் பெறுதல் ஆகியவைக்கு ஏலதாரர்கள் பீனிக்ஸ் இணையதளம், https://phoenixarc.co.in?p=7655 மேலும் இங்கே மேலே குறிப்பிட்ட இணைப்பு மற்றும் சேவை வழங்குநர் இணையதளம், www.bankeauctions.com ஆகியவற்றை ஆழ்ந்து படிக்கவும். **3.** ஏலதாரர்கள் தங்கள் சொந்த அலுவலகங்கள்/அவர்தம் விருப்பமான இடத்திலிருந்து விலைப்புள்ளி/ஏலப்புள்ளியை குறிப்பிட்டு மின்–ஏலத்தில் பங்கேற்கலாம். வலைதளத் தொடர்பு இணைப்பு ஒவ்வொரு ஏலதாரராலும் தாமாக/சுயமாக ஏற்பாடு செய்து கொள்ளப்பட வேண்டும். வலைதள இணைப்பு, வலைத்தொடர்பு பிரச்சனைகள், கணினி உடைந்து போதல், மின்வெட்டு ஏனையவைக்கு அதிகாரப்பூர்வ அதிகாரி/ பீனிக்ஸ்/ சேவை வழங்குநர் பொறுப்பேற்க மாட்டார். **4. விவரங்கள், உதவி, நடைமுறை மேலும் மின்–ஏலம் மீதான இயங்குதளப் பயிற்சிக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள், திரு.பவிக் பாண்ட்யா M/s. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், தொடர்பு எண்: 91–124–4302020/2021/2022/2023/2024, +91–8866682937/07291981124/25/26, மின்னஞ்சல் முகவரி: support@bankeauctions.com / maharashtra@c1india.com தொடர்பு கொள்ளலாம். 5.** ஆர்வமுள்ள கொள்முதலாளர்கள்/ ஏலதாரர்கள் ஏலத்துக்கு வைக்கப்பட்ட கடனீட்டுச் சொத்து விவரங்களை சரிபார்க்க/ ஏலப்புள்ளிப் படிவம் பெறுவதற்கு பீனிக்ஸ் இணையதளத்தில் தரப்பட்டுள்ள விவரங்களை நன்கு படிக்கவும். **6.** மின்–ஏலம் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் நடத்தப்படும், அதேவேளையில் மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தானது **"உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது எதுவோ அது மேலும் உதவிசாரா அடிப்படை** நிபந்தனையில் விற்பனை செய்யப்படும். **7.** அனைத்து ஆர்வமுள்ள கொள்முதலாளர்கள்/ ஏலதாரர்கள் மேற்கூறிய நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலத்தில் பங்கேற்பதற்காக கட்டணமின்றி https://www.bankeauctions.com ஆக மேற்குறிப்பிட்ட இணையமுகப்பில் அவர்தம் பெயரைப் பதிவு செய்து பயனாளர் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் பெற வேண்டும். **8.** மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கு, திட்டமிடும் கொள்முதலாளர்கள்/ ஏலதாரர்கள் பான்கார்டு, நிறுவனமாக இருந்தால் வாரியக்குழுத் தீர்மானங்கள் மற்றும் முகவரிச் சான்று நகல்பிரதிகளுடன் கடனீட்டுச் சொத்து நிர்ணய விலையின் 10% தொகைக்குத் திருப்பியளிக்கப்படுவதான முன்வைப்புத்தொகைப் பணப்பட்டுவாடா விவரங்களை மேற்குறிப்பிட்ட முன்வைப்புத்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளில் அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும். **9.** வெற்றிபெறும் கொள்முதலாளர்/ ஏலதாரர் மேற்குறிப்பிட்ட ஏலத் தேதியில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் வங்கி நேரம் முடிவடையும் முன்பு மேற்குறிப்பிட்ட கணக்குக்கு RTGS/NEFT மூலம் அவருடைய/அதனுடைய விலைப்புள்ளியின் 25% (முன்வைப்புத்தொகை உட்பட) தொகையைச் செலுத்த வேண்டும், இந்த வைப்பு பீனிக்ஸ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும், தவறினால் விற்பனை தோல்வியுற்றதாகக் கருதப்படும் மேலும் மேற்கூறிய வெற்றிகர கொள்முதலாளர்/ ஏலதாரரின் முன்வைப்புத்தொகை கைக்கொள்ளப்படும். **10.** வெற்றிபெறும் கொள்முதலாளர்/ ஏலதாரர் மேற்குறிப்பிட்ட ஏலத் தேதியில் அல்லது மின்–ஏலம் முடிந்த ஐந்து வேலை நாளுக்கு மிகாமல் செலுத்த வேண்டும். முன்வைப்புத் தொகைக்கு எந்த வட்டியும் இல்லை. **11.** கொள்முதல் ஏற்பின் மீதித்தொகையானது மேற்கூறிய கடனீட்டுச் சொத்து விற்பனை உறுதிப்படுத்தப்பட்டதன் பதினைந்தாம் (15) நாளில் அல்லது அதற்கு முன்பு அல்லது எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொள்ளப்படும் நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் வெற்றிபெறும் கொள்முதலாளர்/ ஏலதாரர் மூலம் செலுத்தப்பட வேண்டும். செலுத்தத் தவறினால், அதுவரை செலுத்திய அனைத்துத் தொகைகளும் கைக்கொள்வதற்கு உட்படும். **12. சொத்து/களை பார்வையிட அல்லது மேலும் தகவலுக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள் Ms. ஜன்ஹவி மனே/ திரு. ஹர்ஷ் மாஹியா அவர்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரியில் janhavi.mane@phoenixarc.co.in/ harsh.magia@phoenixarc.co.in (மின்னஞ்சல்) அல்லது 8655873640 / 7506107562 (கைபேசி) எண்ணில் தொடர்பு கொள்ளலாம். 13.** ஏலத்தின் எந்த கட்டத்திலும், அதிகாரப்பூர்வ அதிகாரி அதற்குரிய எந்த காரணத்தையும் கருதாமல் மேலும் எந்த முன்னறிவிப்பின்றி ஏலப்புள்ளி/ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்/ நிராகரிக்கலாம்/மாற்றலாம்/ரத்து செய்யலாம் அல்லது ஏலத்தை ஒத்தி வைக்கலாம். **14.** வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் பொருந்தும் சட்டப்படி அவருடைய/ அதனுடைய பெயரில் கடனீட்டுச் சொத்தினை உரிமைமாற்றும்/வழங்கும் வகையில் செலுத்தப்பட வேண்டிய அனைத்து சட்டப்பூர்வ நிலுவைகள், வரிகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள், கொள்முதல் ஏற்பு மீதான பொருந்தும் சரக்கு மற்றும் சேவை வரி, முத்திரைத்தாள் தீர்வை, பதிவுக் கட்டணங்கள் ஏனையவற்றை ஏற்க வேண்டும். **15.** எந்த நேரத்திலும் சொத்துக்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து சட்டப்பூர்வ/சட்டப்பூர்வமற்ற நிலுவைகள், வரிகள், விகிதங்கள், மதிப்பீடுகள், விதிப்புகள், சங்கம் நிலுவைகள் ஏனையவற்றை செலுத்துதல், வெற்றிகர ஏலதாரரின் முழுப் பொறுப்பு மட்டுமாகும். **16.** வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் அதனுடைய/அவருடைய பெயரில் உரிமைகளை மாற்றுவதற்காக சங்கம்/ ஏதேனும் பிற ஆணையங்கள் அல்லது வாரியத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய அனைத்து விலை/ செலவுகள் / கட்டணங்கள்/ விதிப்புகள் ஏனையவைக்கு முழுப் பொறுப்பேற்க வேண்டும். **17.** எதிர்பார்க்கும் கொள்முதலாளர்/திட்டமிடும் ஏலதாரர்கள் கடனீட்டு சொத்து தொடர்பான வில்லங்கங்கள், மின் ஏலத்துக்கு வைக்கப்படும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அது தொடர்பான கோரிக்கைகள்/உரிமைகள்/ செலுத்தப்பட வேண்டிய சட்டப்பூர்வ நிலுவைத் தொகைகள் உட்பட குறித்து சுயமான விசாரணைகள், ஆய்வுகள், சோதித்தல் மூலமாக அவர்களே சுயமாக திருப்தியடைவது அவர்களுடைய தனிப்பொறுப்பாகும். **18.** செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட மின்–ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள், கீழே கையொப்பமிட்டவருக்குத் தெரிந்த தகவல்களுக்கு உட்பட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளன; இருப்பினும், ஏதேனும் தவறு, தவறான கூற்று அல்லது விடுபடல்களுக்கு கீழே கையொப்பமிட்டவர் பொறுப்பேற்க மாட்டார். **19.** எதிர்பார்க்கும்/திட்டமிடும் ஏலதாரர்கள் அவர்/அவள், பிரிவு **29 (A)** வழிமுறைகளின்படி கடன்தீர்க்க வழியில்லாத திவால் சட்டம் **2016** இன்படி தாங்கள் பாதிக்கப்படவில்லை என **KYC** ஆவணங்களுடன் உறுதி அளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாதபட்சத்தில் அவர்/அவள் ஆகியோரின் ஏலம் தானாகவே தகுதியிழப்பை அடைந்து தள்ளுபடி செய்யப்படும். **20.** இங்கே மேலே அட்டவணையிடப்பட்ட ஏலம் ஏதேனும் காரணத்துக்காக தோல்வியுற்றால், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) மற்றும் சர்பாசி சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் ஏதேனும் பிற முறைகளில் கடனீட்டுச் சொத்தினை விற்க பீனிக்ஸ் உரிமை கொண்டுள்ளது. **21.** மேற்கூறிய நிலுவைத்தொகைகளை செலுத்தும் பொறுப்புக்குட்பட்ட கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள்/உரிமையாளர்கள்/அடமானதாரர்கள் இந்த விற்பனை அறிவிப்பை, மேற்குறிப்பிட்ட ஏல விற்பனை நடைபெறுதல் குறித்த, கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகளின் விதி 8 பிரிவு (6) கீழான ஒரு அறிவிப்பாகக் கருத வேண்டும்.

இடம்: சென்னை
நாள்: 05 அக்டோபர் 2026

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
பீனிக்ஸ் ஏஆர்சி லிமிடெட்
பீனிக்ஸ் டிரஸ்ட்–FY25–2